# மேல் மாகாண மாகாண சபை - சபைக் கூட்டம்

**2018 ஜனவரி மாதம் 09 ஆந் திகதி மு.ப. 09.30 க்கு**

## நிகழ்ச்சி நிரல்

- **I.** தவிசாளரின் அறிவிப்புக்கள்
- **II.** அறிக்கைகளையும், ஆவணங்களையும், சமர்ப்பித்தல்
- **III.** செயற்குழுக்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்
- **IV.** மனுக்கள்
- **V.** கேள்விகள்

**01.** **கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு, மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சரிடம் 2017.12.05 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி: (Îæ/vi (1)17/112)**

அ. நீர்கொழும்பு மாநகர சபையின் மூலம் நிர்வகிக்கப்படும் கடைத் தொகுதியின் வாகனப் போக்குவரத்துத் திட்டமிடல் நடவடிக்கை இதற்கு மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் ஒழுங்கான முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டது என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

ஆ. அத் திட்டத்திற்கு இணங்க விஷேட சந்தர்ப்பத்தில் மாத்திரமே ஒரு நிரையில் வாகனங்கள் பயணிப்பதற்கு இடம் வழங்கப்பட்டது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

இ. இவ் வேளையில் எவருக்கும் அறிவிக்காது அக் கடைத் தொகுதியில் ஒரு பக்கத்திற்கு மாத்திரம் வாகனங்கள் பயணிப்பதற்கு இடமளிக்கப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஈ. உரிய வியாபாரிகளுக்கு மற்றும் உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்காது அத் திட்டத்தினை நடைமுறைப் படுத்தியது தொடர்பாக குறித்த நபர்களுக்கு எதிராக நீங்கள் எடுக்கும் நடவடிக்கை யாது ?

உ. வியாபாரிகளுக்கு நீதி ஒன்றினை வழங்குவதற்கு ஏற்ற முறையில் முன்னரைப் போலவே நடைமுறையில் இருந்த வாகனப் போக்குவரத்துத் திட்டத்தினை நடைமுறைப்படுத்த நீங்கள் எடுக்கும் நடவடிக்கை யாது ?

ஊ. இல்லையாயின் ஏன் ?

**02.** **கௌரவ லக்ஷ்மன் நிபுணாரச்சி உறுப்பினரினால் கௌரவ வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சரிடம் 2017.12.05 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (Îæ/vi (1)17/117)**

அ. வரையறுக்கப்பட்ட 532/சீ வத்தேகெதர சணச சங்கத்தின் நிதி மோசடிக்கு உரிய ஒழுக்காற்று நடவடிக்கை நிறைவு பெற்றுள்ளதா ?

ஆ. நிறைவு பெறவில்லையாயின் காரணம் என்ன ?

இ. இது வரை நடந்த விசாரணைகளுக்கு இணங்க முழுமையான விபரம் உள்ளிட்ட அறிக்கை ஒன்றினை சபைக்கு சமர்ப்பிப்பீர்களா ?

ஈ. அந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு முறைகேடு நிகழ்ந்துள்ள முறை தொடர்பாக வெளியாகியுள்ள விபரங்கள் யாவை ?

உ. அச் சங்கத்தின் நடவடிக்கை இடைநிறுத்தப்பட்ட பின்னர் சேகரிக்கப்பட்டுள்ள நிதியின் பெறுமதி எவ்வளவு ?

ஊ. தமது உரிமைக்காக குரல் கொடுக்கும் வைப்பாளர்களுக்காக அந் நிதியை நீதியான முறையில் பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுப்பீர்களா ?

எ. இல்லையாயின் ஏன் ?

**03.** **கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சரிடம் கேட்பதற்கு : (Ïæ/vi (1)17/120)**

அ. கட்டான பிரதேச செயலாளர் பிரிவில் இலக்கம் 204 பீ கிராம அலுவலகர் பிரிவுனுள் பயண இலக்கம் 244 சீதுவ, கொடுகொட வீதியும் ஜாஎல மினுவன்கொட வீதியும் இணையுமாறு வீதிக்காக சாலை இட ஒதுக்கீடு ஒன்று உள்ளதென்பதை நீங்கள் அறிவீர்களா ?

ஆ. அச் சாலை இட ஒதுக்கீட்டின் ஒரு பகுதியானது வீதி ஒன்றுக்காக பயன்படுத்தப்பட்ட போதும் இன்னுமொரு பகுதி ஒன்று அங்கீகாரமற்ற நிர்மாணம் ஒன்று தீர்மாணிக்கப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

இ. கட்டான பிரதேச செயலாளரினால் கடா/217/07 ஆம் இலக்க கோப்பு இலக்கத்தின் கீழ் 2017.07.05 ஆந் திகதி அந்த சாலை இட ஒதுக்கீட்டுக்கு அளப்பு கட்டளை ஒன்றினைப் பெற்றுக் கொள்வதற்காக நில அளவைத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்பதனையும், நில அளவைத் திணைக்களத்தினால் கட்டா/2017/345 கோப்பு இலக்கத்தின் கீழ் சாலை இட ஒதுக்கீட்டின் எல்லையினை அடையாளமிட்டு பிரதேச செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஈ. அந்த சாலை இட ஒதுக்கீட்டு எல்லையை அடையாளமிட்ட பின்னர் சில பிரிவினரினால் காணித் துண்டை 99 வருட குத்தகை முறையின் கீழ் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

உ. சாலை இட ஒதுக்கீட்டினைப் பயன்படுத்தி மாற்று வீதி ஒன்றாக நிர்மாணிக்கப்பட்டால் மிலேனியம் சிடி, நிவாசிபுற, ஏக்கல, மிட்லன்ட் தோட்டம் போன்ற நகரங்களுக்கு செல்ல முடியும் என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

## VI. வருகை தராமல் இருக்க அங்கீகாரம் பெறும் யோசனை

## VII. அமைச்சுக்களின் அறிவிப்புக்களும்/அமைச்சர்களின் தகவல்களும்

## VIII. தனிப்பட்ட தெளிவுபடுத்தல்கள்

## IX. பொது நடவடிக்கை

**01.** **கௌரவ சுமித்லால் மென்திஸ் - சுகாதார, உள்நாட்டு வைத்திய, சமூக சேவைகள், சமூக நலன்புரி நன்நடத்தை சிறுவர் பராமரிப்புச் சேவை, மகளிர் விவகாரம் மற்றும் சபை நடவடிக்கை தொடர்பான அமைச்சர் (மே.மா)**

**பிரேரணை** :

<u>மேல் மாகாண மாகாண சபையின் புதிய நடவடிக்கை ஒழுங்கு விதிகள்</u>

"2017.11.07 ஆந் திகதி மேல் மாகாண மாகாண சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட மேல் மாகாண மாகாண சபையின் புதிய நடவடிக்கை ஒழுங்கு விதிகள் நகல் பிரதி தொடர்பாக கலந்துரையாடி அங்கீகரிக்க வேண்டும்"

(2017.11..14 ஆந் திகதி நடைபெற்ற சபைக் கூட்ட நடவடிக்கைகளுடன் தொடர்புடையது)

## X. தனிப்பட்ட உறுப்பினர்களின் நடவடிக்கைகள்

**01.** **கௌரவ லக்ஷ்மன் நிபுணாரச்சி அவர்கள்**

மேல் மாகாணத்தின் கொழும்பு மற்றும் களுத்துறை ஆகிய 2 மாவட்டங்களுக்கு உரிய பிரதேசத்தில் அமைந்துள்ள போல்கொட கங்கை எனவும், ஆறு எனவும் அழைக்கப்படும் சதுப்பு நிலப் பகுதியானது மாகாணத்தின் அபிவிருத்திக்கு பயன்படுத்தக் கூடிய பெறுமதி மிக்க வளம் ஒன்றாகும், பொருளாதார

மற்றும் சுற்றாடல் ரீதியில் இந்த சதுப்பு நில அமைப்பு தற்போது பல்வேறுபட்ட அழிவுகளுக்கு உட்பட்டு

மனித வள அபிவிருத்தியுடன் தொடர்பு இல்லாத எந்தவொரு நிர்வாக தாபனத்தினதும் நேரடி அபிவிருத்தி ஒன்றுக்கு பங்களிப்புச் செய்யப்படாது கைவிடப்பட்டுள்ள வளம் ஒன்றாக மாறியுள்ளது. நன்நீர் மீன் வளர்ப்பு, மாகாண சுற்றுலா வியாபாரம், பொருட் போக்குவரத்து, சதுப்பு நிலத்தினை அண்டியதான மருந்து,

மருந்துச் செடிகள் மற்றும் விவசாய அபிவிருத்தி நிலைமையைப் போசிக்கக் கூடிய பல வகையான பெறுமதி மிக்க வளம் ஒன்றாக உபயோகத்திற்கு எடுக்கக் கூடிய இந்த சுற்றாடல் அமைப்பு தொடர்பாக விரிவான விஞ்ஞான ரீதியிலான கணிப்பின் பின்னர் நிர்வாகத் தாபனம் ஒன்றினை இணைத்து போல்கொட சதுப்பு நிலப் பகுதியின் நன்மைக்காக அபிவிருத்தி வேலைத் திட்டம் ஒன்றினைத் தயாரிக்க வேண்டும் என இம் மேல் மாகாண மாகாண சபை பிரேரணை தெரிவிக்கின்றது.

**(பி/vi(1)17/08)**

**02.** **கௌரவ நிஷாந்த சிறீ வர்ணசிங்ஹ அவர்கள்**

இலங்கையில் திறந்த பொருளாதாரத்திற்குரிய சந்தையினை அறிமுகப்படுத்தியதுடன் பாவனை செயற்பாடு விரைவாக அதிகரித்ததன் பலாபலனாக அகற்றப்படும் கழிவுகளின் அளவும் விரைவாக அதிகரித்துச் சென்றது. அவ்வாறு அகற்றப்படும் கழிவுகளில் உக்காத லன்ச்சீட், சிலிபேக், ரெஜிபோம், பொலிதீன் போன்றன பெருமளவு சேர்ந்துள்ளதுடன் அதன் பலாபலனாக உக்கும் கழிவுகள் உக்கல் அடைய தாமதமாகுவதுடன், சுற்றாடலுக்கும் சமூகத்திற்கும் சிறந்த ஆரோக்கியத்திற்கும், பிற விலங்குகளுக்கும் பாரிய அளவு தாக்கத்தினை ஏற்படுத்துவதுடன், உக்காது குப்பை மேடு நிரப்பப்படுவதினால் பாரிய அளவு துயரமான விடயங்களும் உயிரிளப்புக்களும் நிகழ்ந்துள்ளது.

கழிவுகளை அகற்றுவதற்கு, உக்குவதற்கு, மீள் சுழற்சி செய்வதற்கு மற்றும் கொம்போஸ்ட் உற்பத்திக்கு லன்ச்சீட், சிலிசிலிபேக், பொலிதீன் பாரிய அளவு தாமதத்தினையும் தடை ஒன்றினையும், செலவினையும் ஏற்படுத்துகின்ற படியால் அவற்றை உற்பத்தி செய்தல், விற்றல் மற்றும் பயன்படுத்துவதைத் தடை செய்து மேன்மை தங்கிய ஜனாதிபதி உள்ளிட்ட அரசு எடுத்த தீர்மானத்திற்கு இந்நாட்டின் எதிர்கால பரம்பரையினர் மற்றும் சுற்றாடல் தொடர்பாக உற்பத்தித் திறன் மிக்க கொள்கை ரீதியான முடிவொன்று என பாராட்டுக்கு மற்றும் மதிப்பிற்கு உட்பட்டுள்ளதுடன், நாட்டுக்காக இப் பொலிதீன் தடையினை நடைமுறைப் படுத்துவதற்கும் அதற்குரிய சட்ட திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கும், மேல் மாகாண சபை ஒத்துழைப்பினை வழங்க வேண்டும் என பிரேரணை தெரிவித்து, இக் கொள்கையினை எந்தவொரு நிர்ப்பந்தம் காரணமாகவும் மாற்றக் கூடாது எனவும், சுற்றாடலை நேசித்தல் மற்றும் மேம்படுத்தலை விரைவாக மக்கள்மயப்படுத்த வேண்டும் எனவும் இம் மேல் மாகாண மாகாண சபை அரசுக்கு பிரேரணை தெரிவிக்கின்றது.

**(பி/vi(1)17/09)**

## XI. சபை ஒத்திவைப்பு

கே.எச்.டி.கே. சமரக்கோன்
செயலாளர்,
மேல் மாகாண மாகாண சபை

**2017.12.20** ஆந் திகதி
சபைச் செயலாளர் காரியாலயம் (மே.மா)
மேல் மாகாண மாகாண சபை,
5ஆம் மாடி, Bஅலகு,
செத்சிறிபாய,
பத்தரமுல்ல.